## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 23, 2017

**1. 2017 மனித வளர்ச்சி குறியீட்டில்(HDI) இந்தியாவின் தரம் என்ன ?**

A. 131 வது
B. 145 வது
C. 168 வது
D. 122 வது

**விடை: A. 131 வது**

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டம் (UNDP) சமீபத்தில் வெளியிட்ட மனித மேம்பாட்டு அறிக்கை (HDR) 2016-யின் படி, மனித வளர்ச்சி குறியீட்டில்(HDI) 188 நாடுகளில் இந்தியா 131-வது நாடாக திகழ்கிறது. அறிக்கை படி, இந்தியாவின் 131-வது தரம் அதனை "நடுத்தர மனித வளர்ச்சி" அடைப்புக்குறிக்குள் வைக்கிறது. வங்கதேசம், பூடான், பாகிஸ்தான், கென்யா, மியான்மர் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளும் இந்த அடைப்புக்குறிக்குள் உள்ளன. இந்தியாவிற்குள் கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கை தரம் ஆகியவற்றில் உள்ள பிராந்திய வேற்றுமைகள் மற்றும் மனித வள மேம்பாட்டில் சமத்துவமின்மை ஆகியவை HDI மதிப்பெண்ணில் இந்தியாவை 27% வீழ்ச்சிக்கு எடுத்துச் சென்றது என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. பட்டியலில் நார்வே முதலிடத்தில் உள்ளது. அதனை தொடர்ந்து ஆஸ்திரேலியா மற்றும் சுவிச்சர்லாந்து உள்ளன.

**2. எந்த மாநில அரசு, சமீபத்தில் அதன் ஊழியர்களுக்கு மானிய கடன்(Subsidized loans) வழங்க ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா(SBI) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது ?**

A. பஞ்சாப்
B. அசாம்
C. மணிப்பூர்
D. உத்தரப் பிரதேசம்

**விடை: B. அசாம்**

அசாம் அரசாங்கம் , மாநில அரசு பணியாளர்களுக்கு மானிய வட்டி விகிதத்தில் வீட்டு வசதி மற்றும் கல்வி கடன்களை வழங்க ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (SBI ) உடன் சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, அசாம் அரசு வீட்டுக் கடனுக்கு 3.50% மற்றும் கல்வி கடனுக்கு 4% என்ற விகிதத்தில் வட்டி மானியம் வழங்கும். அதன்படி, மாநில அரசு ஊழியர்கள் வட்டி விகிதங்கள் மற்றும் குறைக்கப்பட்ட EMI அடிப்படையில் கணிசமான பயன்களை பெறுவார்கள். நீண்ட காலம் கடனை திருப்பி செலுத்தும் வசதியுடன் இணை இலவச கடன், ஜீரோ மார்ஜின், ஜீரோ செயலாக்க கட்டணம் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளும் உள்ளன. வீட்டுக் கடன் மற்றும் கல்வி கடனுக்கான அதிகபட்ச எல்லை முறையே ரூ. 15 லட்சம் மற்றும் ரூ 10 லட்சம் ஆகும்.

**3. 2017 ஆம் ஆண்டிற்கான ஏபெல் பரிசு வென்றுள்ளவர் யார் ?**

A. ஆண்ட்ரூ ஜே வில்ஸ் / Andrew J. Wiles
B. லூயிஸ் நிரேன்பெர்க் / Louis Nirenberg
C. வைவெஸ் மேயர் / Yves Meyer
D. ஜான் எப் நாஷ் / John F. Nash

**விடை: C. வைவெஸ் மேயர் / Yves Meyer**

பிரஞ்சு கணிதயியலாளர் வைவெஸ் மேயர், வேவ்லெட்டுகள்(சிறிய அலைகள் அல்லது சிற்றலைகள்) கணித கோட்பாடு உருவாகத்தில் அவரின் முக்கிய பங்கிற்காக மதிப்புமிக்க 2017 ஏபெல் பரிசை வென்றுள்ளார். மேயர், இவ்விருதிற்காக 6 மில்லியன் நார்விய குரோனை (சுமார் £ 600,000) பெறுவார். இவ்விருது, கணிதத்திற்கு மிகச்சிறந்த பங்களிப்பை அளிப்பவர்களை அங்கீகரிக்கிறது மற்றும் நார்வேயின் அறிவியல் மற்றும் எழுத்துகள் அகாடமி மூலம் ஆண்டுதோறும் விருது வழங்கப்படுகிறது.

**4. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின்(SEBI) புதிய முழு நேர உறுப்பினராக (WTM) நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. குருமூர்த்தி மகாலிங்கம்
B. எம் எம் படேல்

C. எஸ் ராமன்
D. மாதாபி பூரி பூச்

**விடை: D. மாதாபி பூரி பூச்**

மாதாபி பூரி பூச், 3 ஆண்டுகளுக்கு இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின்(SEBI) புதிய முழு நேர உறுப்பினராக (WTM) நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அரசின் கூடுதல் செயலாளர் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பளம் அல்லது தொகுக்கப்பட்ட சம்பளமாக மாதத்திற்கு ரூ. 3.75 லட்சம் பெறுவார். சந்தை சீராக்கியின் ஒரு முக்கிய பதவிக்கு தனியார் துறையை சேர்ந்த ஒருவர், அதுவும் ஒரு பெண் நியமிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும். இவர் அகோரா ஆலோசனை பிரைவேட் லிமிடெட் நிறுவனர்- இயக்குனர் மற்றும் தற்போது சீனாவின் ஷாங்காயில் உள்ள புதிய அபிவிருத்தி வங்கியில் உள்ளார்.

**5. எந்த இந்திய துப்பாக்கிசுடும் வீரர், மெக்ஸிகோவில் நடைபெற்ற 2017 சர்வதேச துப்பாக்கிசுடும் விளையாட்டு கூட்டமைப்பு (ISSF) உலக கோப்பையில் ஆண்களுக்கான இரட்டை ட்ராப் நிகழ்வில் தங்கம் வென்றுள்ளார் ?**

A. மான் சிங்
B. அங்கத் வீர் சிங் பஜ்வா
C. அம்ரீந்தர் சீமா
D. அங்கூர் மிட்டல்

**விடை: D. அங்கூர் மிட்டல்**

சமீபத்தில் இந்திய துப்பாக்கிசுடும் வீரர் அங்கூர் மிட்டல், மார்ச் 22 அன்று மெக்ஸிகோவில் நடைபெற்ற 2017 சர்வதேச துப்பாக்கிசுடும் விளையாட்டு கூட்டமைப்பு (ISSF) உலக கோப்பையில் ஆண்களுக்கான இரட்டை ட்ராப் நிகழ்வில் தங்கம் வென்றுள்ளார். 2017 பிப்ரவரி மாதம் புது தில்லியில் நடைபெற்ற 2017 ISSF உலகக் கோப்பையில் தங்கம் வென்றவரான ஜேம்ஸ் வில்லெட்டை இப்போட்டியில் தோற்கடித்து அங்கூர் தங்கம் வென்றுள்ளார். மேலும் அங்கூர், புது தில்லியில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பையில் ஆண்களுக்கான இரட்டை ட்ராப் நிகழ்வில் வெள்ளிப்பதக்கம் வென்றிருந்தார்.

**6. 2017 India Sourcing Fair (ISF) எந்த நாட்டில் நடைபெறவுள்ளது ?**

A. நேபாளம்
B. மியான்மர்
C. இலங்கை
D. பூடான்

**விடை: C. இலங்கை**

2017 India Sourcing Fair (ISF), இலங்கையின் கொழும்புவில் உள்ள பண்டாரநாயக்கா நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) மார்ச் 24 முதல் 26 வரை நடைபெறும். இதனை இந்திய வர்த்தக துறை அமைச்சகத்தின் கீழ் இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பு (ITPO) நடத்தவுள்ளது. ISF 2017-யின் முக்கிய நோக்கமானது, மற்ற நாடுகளில் இருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் மூலங்களை அதிகளவில் பெறுகிற இலங்கை சகாக்களுக்கு இந்திய நிறுவனங்களின் வலிமையை வெளிக்காட்டுவதாகும். சமீபத்திய கண்டுபிடிப்புகள், இந்திய நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள் மற்றும் பொருட்களை காணும் வாய்ப்பை இலங்கை தொழிலதிபர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு ISF 2017 வழங்குகிறது. இந்த நிகழ்வு மோட்டார் வாகனங்கள் மற்றும் கார் பாகங்கள், பொறியியல் பொருட்கள், ஜவுளி, ஆடைகள், அணிகலன்கள், உணவு மற்றும் விருந்தோம்பல் பொருட்கள், பேக்கரி மற்றும் விடுதி உபகரணங்கள், பேக்கேஜிங் மற்றும் அச்சிடும் தொழில் மற்றும் இத்துறையில் உள்ள இதர பொருட்களை காட்சிப்படுத்தும்.

**7. 2017 உலக காசநோய் தினத்தின் (WTD) மையக்கரு என்ன ?**

A. Call for a world free of TB
B. Unite to End TB
C. Gear up to end TB
D. Stop TB in my lifetime

**விடை: B. Unite to End TB**

உலகளாவிய தொற்றுநோயான காசநோய் மற்றும் அதனை அகற்றவேண்டிய முயற்சிகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்த மார்ச் 24 ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் உலக காசநோய் தினம் அனுசரிக்கப்படுகிறது. "மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ்" என்ற பாக்டீரியா மூலம் காசநோய் ஏற்படுகிறது, பெரும்பாலும் இது நுரையீரலை பாதிக்கும். காற்றின் மூலம் ஒரு நபரில் இருந்து மற்றொருவருக்கு இந்நோய் பரவும். உலக சுகாதார அமைப்பு (WHO) அறிக்கைப்படி, 2015 ஆம் ஆண்டில் 10.4 மில்லியன் மக்கள் காசநோயால் நோய்வாய்ப்பட்டு, 1.8 மில்லியன் மக்கள் நோயால் இறந்தனர். 95% க்கும் அதிகமான காசநோய் மரணங்கள், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில் ஏற்படுகிறது. 2017 ஆம் ஆண்டிற்கான மையக்கரு “Unite to End TB”.

**8. சிமெண்ட் தொழிலில் மாற்று எரிபொருள் மற்றும் மூலப்பொருட்கள் குறித்த 3-வது சர்வதேச மாநாடு, எந்த நாட்டில் தொடங்கியது ?**

A. இந்தியா
B. சீனா
C. அமெரிக்கா
D. ஆஸ்திரேலியா

**விடை: A. இந்தியா**

"Alternate Fuels and Raw Materials in Cement Industry -Towards Realising Swachh Bharat Dream” குறித்த 3-வது சர்வதேச மாநாடு, புது தில்லியில் மார்ச் 23 முதல் தொடங்கியது, இதனை இந்திய சிமெண்ட் உற்பத்தியாளர்களின் சங்கம்(CMA) ஏற்பாடு செய்தது. 2 நாள் மாநாடானது, சிமெண்ட் துறையில் மாற்று எரிபொருள் மற்றும் மூலப்பொருட்களின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான தொழில்நுட்ப ஒழுங்குமுறை மற்றும் நிதி தீர்வுகளை சாத்தியமாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

**9. மத்திய அரசின் "ராஷ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனா (RVY)" திட்டம், எந்த மாநிலத்தில் இருந்து தொடங்கப்படவுள்ளது ?**

A. உத்தரப் பிரதேசம்
B. ஆந்திரப் பிரதேசம்

C. மத்தியப் பிரதேசம்
D. தமிழ்நாடு

**விடை : B. ஆந்திரப் பிரதேசம்**

வறுமை கோட்டிற்கு கீழுள்ள(BPL) மூத்த குடிமக்களுக்கு உடலியக்க உதவிகள் மற்றும் வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் "ராஷ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனா (RVY)" திட்டம், மத்திய அரசாங்கத்தின் மூலம் ஆந்திரப் பிரதேசம் மாநிலம் நெல்லூரில் மாவட்டத்தில் 2017 ஏப்ரல் 1 ஆம் தேதி தொடங்கி வைக்கப்படும். பேராவலுள்ள RVY திட்டம், இந்தியாவில் முதல் வகையான திட்டமாகும், முழுக்க முழுக்க மத்திய அரசே இதற்கு நிதியுதவி அளிக்கிறது. இந்த மத்திய துறை திட்டம் (CSS), 3 ஆண்டுகளில் 5,20,000 மூத்த குடிமக்களுக்கு பெரிதும் உதவக்கூடும் என்று தெரிகிறது. திட்டம் முழுவதும் 'செயற்கை கால்கள் தயாரிப்பு கழகம் (ALIMCO)' மூலம் மட்டுமே செயல்முறைபடுத்தப்படுகிறது, இது உடலியக்க உதவிகள் மற்றும் வாழ்வாதார உபகரணங்களின் பராமரிப்பை ஒரு ஆண்டுக்கு இலவசமாக செய்யும். மூத்த குடிமக்கள் தங்கள் வயது தொடர்பான உடல் வலுக்குறையை கடந்து பராமரிப்பு அளிப்பவர்கள் அல்லது குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களின் குறைந்த துணையுடன் கண்ணியமிக்க மற்றும் வளமான வாழ்க்கையை வாழ மூத்த குடிமக்களுக்கு இந்த உபகரணங்கள் உதவும்.

**10. மத்தியப் பிரதேசத்தின் மாவட்ட சாலைகளை மேம்படுத்த, இந்திய அரசாங்கம்(GOI) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) இடையே எவ்வளவு கடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது ?**

A. $ 550 மில்லியன்
B. $ 450 மில்லியன்
C. $ 650 மில்லியன்
D. $ 350 மில்லியன்

**விடை: D. $ 350 மில்லியன்**

இந்திய அரசாங்கம்(GOI) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB), மத்தியப் பிரதேசத்தின் மாவட்ட சாலைகளை மேம்படுத்த $ 350 மில்லியன் தொகைக்கு கடன் ஒப்பந்தம் செய்துள்ளது. மத்தியப் பிரதேச மாவட்ட இணைப்புத்துறை

திட்டமானது லேன் அகலப்படுத்துதல், மேற்பரப்பு மேம்பாடுகள், மதகுகள் மற்றும் பாலங்கள் வலிமையாக்கல் மூலம் மத்தியப் பிரதேசத்தின் முக்கிய மாவட்டங்களில் சுமார் 1,600 கிலோமீட்டர் சாலைகளை மேம்படுத்தும். மதகுகள் மற்றும் பாலங்களை வலுப்படுத்துதல் மற்றும் விபத்துக்கு உடனடி பதிலளிக்கும் முறைகளில் இந்த திட்டம் கவனம் செலுத்தும். இது, இந்தியாவின் மாவட்ட சாலைகள் துறைக்கு ADB-யின் முதல் கடன் மற்றும் நாட்டில் கிராமப்புற சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலை இடையே ஒரு முக்கிய இணைப்பை வழங்கும் தற்போது நடந்து கொண்டிருக்கும் கவனிக்க தவறவிட்ட இந்த இரண்டாம் சாலைகளின் சாலை வலையமைப்பு மேம்பாட்டை கவனத்தில் கொள்ளும்.